بسم ١ لله الرحمن الرحيم

ஸல்லல்லாஹு அலா முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

நோன்பு நோற்போம்!

ஈமான் கொண்டோர்களே! உங்களுக்கு முன் இருந்தவர்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் (அது) விதியாக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம் நீங்கள் தூய்மையுடையோர் ஆகலாம். (2 : 183)

நோன்பு எனக்கு உரியது. நானே அதற்குக் கூலியாகி விடுகிறேன். (ஹதீஸ் குத்ஸீ , முஸ்லிம் 15)

திருமணம் செய்ய ஆற்றல் பெறாதவர்கள் நோன்பு நோற்கட்டும். அது அவருக்குக் கேடயமாக இருக்கும். (புகாரி, முஸ்லிம் 1400)

நோன்பு என்ற பொருளைக் குறிக்கும் சவ்ம் என்ற அறபு வார்த்தைக்குத் தடுத்தல் என்பது அகராதிப் பொருளாகும். முஸ்லீம்களின் நடைமுறையில் (அதிகாலை) கிழக்கு வெளுத்தது முதல் (ஃபஜ்ருடைய நேர ஆரம்பம்) மாலை – சூரியன் மறையும் வரை உண்பதை விட்டும் குடிப்பதை விட்டும் உடலுறவு கொள்வதை விட்டும் நோன்பிருக்கிறேன் என்ற எண்ணத்தோடு தவிர்ந்து கொள்ளுதல் எனவும் கூறப்படும்.

நோன்பின் வகைகள் :

நோன்பு ஆறு வகைப்படும்.

(1) ஃபர்ளான நோன்பு : ரமலான் நோன்பு

(2) வாஜிபான நோன்பு : (1) நபிலான நோன்புகளில் இடையில் முறிந்ததை மீண்டும் மற்றொரு நாள் நோற்கும் களா நோன்பு (2) நேர்ச்சை நோன்பு

(3) சுன்னத்தான நோன்பு : (1) முஹர்ரம் மாதம் 9, 10 அல்லது 10, 11 ஆகிய பிறைகளில் நோற்க வேண்டிய ஆஷூரா நோன்பு

(4) முஸ்தஹப்பான நோன்பு : (1) ஒவ்வொரு மாதமும் 13, 14, 15 ஆகிய பிறைகளில் நோற்கும் அய்யாமுல் ஃபீல் நோன்பு (2) ஒவ்வொரு வாரமும் திங்கள், வியாழக்கிழமைகளில் நோற்கும் நோன்பு (3) ஷவ்வால் மாதம் நோற்கும் ஆறு நோன்பு (4) துல்ஹஜ் பிறை 9ல் நோற்கும் அரஃபா நோன்பு

(5) மக்ரூஹான நோன்பு : (1) ஆஷூரா நோன்பை ஒரு நோன்பாக மட்டும் வைத்தல் (2) சனிக்கிழமை மட்டும் தனித்து நோற்கும் நோன்பு (3) இஃப்தாரோ, ஸஹரோ இல்லாமல் தொடர்ந்து பல நாட்கள் நோற்கும் சவ்மு விசால் என்னும் நோன்பு

(6) ஹராமான நோன்பு : (1) நோன்புப் பெருநாள் அன்று நோன்பிருத்தல் (2) ஈகைத் திருநாள் அன்று நோன்பிருத்தல் (3) துல்ஹஜ் பிறை 11, 12, 13 ஆகிய அய்யாமுத் தஷ்ரீக் நாட்களில் நோன்பிருத்தல்

நிய்யத்து:

நிய்யத்து என்பது மனதில் ஏற்படும் எண்ணம் ஆகும். நோன்பு வைக்கிறேன் என நினைத்தலே நிய்யத் என்று கூறப்படும். மனதிற்குள் நிய்யத் வைத்தாலே போதுமானதாகும். வாயால் மொழிவது சிறப்பிற்குரியதாகும். கட்டாயமல்ல. ரமலான் மாதத்தில் வைக்கும் நோன்பு காலம் குறிப்பிட்ட நேர்ச்சை நோன்பு, நஃபிலான நோன்பு ஆகிய நோன்புகளுக்கு பாதி நேரம் வரை நிய்யத் வைக்கலாம். ஆனால், இடைப்பட்ட நேரத்தில் (நோன்பின் ஆரம்ப நேரத்திலிருந்து நிய்யத்து வைக்கும் வரை) நோன்பை முறிக்கும் எந்தக் காரியமும் நிகழாதிருக்க வேண்டும்.

ரமளான் மாத்தின் விடுபட்ட களா நோன்பு, நபிலான நோன்புகளில் முறிந்தவற்றை மீணடும் நோற்கும் களா நோன்பு, கஃப்ஃபாரா நோன்பு ஆகிய நோன்பிற்கு ஃபஜ்ரு நேரம் ஆரம்பிக்கும் முன்பே, நிய்யத்து வைக்க வேண்டும். அதற்குப் பின் தள்ளினால் நோன்பு கூடாது.

ஃபித்யா தொகை எனக் கூறப்படும்.

இஃதிகாஃப் :

ஜமாஅத் தொழுகை நடைபெறும் பள்ளியில் ஆண்களும், வீட்டுப் பள்ளி என்ற வீட்டில் மறைவான பகுதியில் பெண்களும் இஃதிகாஃப் இருக்கிறேன் என்ற நிய்யத்தோடு தங்கி இருப்பதற்கு இஃதிகாஃப் என்று சொல்லப்படும். ஓர் அரசனின் அரண்மனை வாயில் தன் தேவைக்காகக் காத்திருக்கும் வரியனைப் போல், இஃதிகாஃப் இருப்பவன் தன் இறைவனிடம் தேவையை எதிர்பார்த்து இருக்கிறதாகும். எதற்காகவேனும் இஃதிகாஃப் இருக்கிறேன் என நேர்ச்சை செய்து கொண்டால் அப்படி எத்தனை நாள் நேர்ச்சை செய்கிறோமோ, அத்தனை நாள் இஃதிகாஃப் இருப்பது வாஜிபாகும். ரமலானில் இறுதிப் பத்து நாட்களில் இஃதிகாஃப் இருப்பது சுன்னத்தாகும். மீதி நேரங்களில் தான் நாடிய போதெல்லாம் இஃதிகாஃப் இருப்பது நஃபிலாகும். பள்ளியில் நுழைபவர் இஃதிகாஃப் நிய்யத் செய்து கொண்டால், குறைந்த நேரமே பள்ளியில் இருந்தாலும் இஃதிகாஃபின் நன்மை உண்டு. வாஜிபான – சுன்னத்தான் இஃதிகாஃபிற்கு மட்டும் பகலில் நோன்பிருத்தல் ஷர்த் என்னும் கட்டாயமாகும்.

நல்ல காரியங்கள் தவிர, பேசாமல் இருப்பதும், குர்ஆன் திக்ரு போன்றவற்றை ஓதுவதிலும், ஹதீஸ் – ஃபிக்ஹ், தஃப்ஸீர் போன்ற மார்க்கக் கல்வி சார்ந்த தேடல்களிலும் நேரத்தைச் செலவு செய்வதும் முஸ்தஹப் ஆகும். இஃதிகாஃப் இருக்கும் நிலையிலேயே தேவையான வியாபாரப் பேச்சு நடத்துவது, சாப்பிடுவதும், உறங்குவதும், அனுமதியுள்ள செயலேயாகும். ஆனாலும், வியாபாரப் பொருட்களை பள்ளியுள் கொண்டு வருவதும், எதுவும் பேசாமல் மவுன விரதம் போல் இருப்பதும் மக்ரூஹ் ஆகும்.

மலம், ஜலம் கழிக்க, குளிக்க, உணவு கொண்டு வர ஆள் இல்லாதபோது, சாப்பிடவும் தான் இஃதிகாஃப் இருக்கும் பள்ளியில் ஜும்ஆ தொழுகை நடைபெற வில்லை என்றால், ஜும்ஆ தொழுகவும் பள்ளியினுள் இருந்தால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் எனப் பயப்படும்போதும் பள்ளியை விட்டு, வெளியில் சென்று வர அனுமதி உண்டு. ஆனால், இந்தத் தேவைகள் நிறைவு பெற்ற உடனே பள்ளிக்குத் திரும்ப வந்து விட வேண்டும்.

மேற்கண்ட காரணம் எதுவும் இல்லாமல் பள்ளியை விட்டு வெளியேறினாலும், பெண்களுக்கு மாதத் தீட்டு ஏற்பட்டாலும், உடல் உறவு கொண்டாலும் அல்லது உடல் உறவின் வழிகோல்களான முத்தம் போன்றவற்றை இச்சையால் ஆன ஆசையோடு செய்தாலும் இஃதிகாஃப் முறிந்து விடும்.

ஸதக்கத்துல் ஃபித்ரு :

ரமலான் மாதத்தில் நோன்பில் ஏற்பட்ட பிழைகள், குற்றங்களுக்கு பரிகாரமாக நோன்புப் பெருநாள் சுபுஹு நேரம் ஆரம்பத்தில் இருந்து பெருநாள் தொழுகைத் திடலுக்குப் போவதற்கு முன் தமக்கும் (உணவு கொடுப்பது தமக்குக் கடமையான) தம்மைச் சார்ந்தவர்களுக்கும் 1.600 கிலோ கிராம் கோதுமை அல்லது அதன் மதிப்புள்ள (உணவுப்) பொருட்கள் அல்லது அதன் கிரயத்தை ஏழைகட்கு கொடுப்பத ஸதக்கத்துல் ஃபித்ரு எனக் கூறப்படும்.

ஜகாத்தின் நிபந்தனைகளில் ஒருவருடம் பூர்த்தியாக வேண்டும் என்பதை மட்டும் கழித்து மற்ற நிபந்தனைகள் யாருக்குப் பொருந்துகிறதோ (ரொக்கப் பணம், நகை, வங்கி இருப்பு போன்ற அசையும் சொத்தின் மதிப்பு 612 கிராம் வெள்ளி அலலது 82.5 கிராம் தங்கத்தின் மதிப்பு இருந்தால்) அவருக்கு ஸதக்கத்துல் ஃபித்ரு கொடுப்பது வாஜிபாகும். பெருநாள் தொழுகைக்கு முன் கொடுக்கத் தவறிவிட்டால் தொழுகைக்குப் பின் கொடுப்பது கூடும். இப்படி பிற்படுத்துவது மக்ரூஹ் ஆகும். பல நபர்களின் ஃபித்ராவை ஒரே நபருக்குக் கொடுப்பது கூடும்.

தொகுப்பு:

மௌலவி.A.அப்துல் மாலிக் அல் புகாரி B.B.A., M.A.,

மௌலவி.தோ.ஆஷிகுர் ரஹ்மான்

ஜலாலி அல் புகாரி ஃபாஜில் ஸகாஃபி (செல் : 9500773021)

அவ்னிய்யா பிரிண்டர்ஸ், திருச்சி – 9. போன் : 9659504855

ரமலான் மாதம நோன்பு வைக்கும் நிய்யத்து :

நவைது ஸவ்மகதின் அன் அதாஇ ஃபர்ளி ரமலான மின் ஹாதிஹிஸ் ஸனதி லில்லாஹி தஆலா.

நோன்பு திறக்கும் நிய்யத்து :

அல்லாஹும்ம லகசும்து வபிக ஆமன்து வ அலைக்க தவக்கல்து வ அலா ரிஜ்கிக அஃப்தர்து ஃபதகப்பல் மின்னீ.

நோன்பாளிக்கு முஸ்தஹப்பான செயல்கள் :

(1) திருப்தியாக ஸஹர் செய்தல் – அதைத் தாமதப்படுத்துதல்.

(2) (திருப்தியாக) நோன்பு திறத்தல் – அதை விரைவுபடுத்துதல்.

(3) பொய், புறம், கோள், திட்டு போன்றவற்றிலிருந்து நாவைப் பாதுகாத்தல்.

(4) நோன்புக் காலத்தைக் குர்ஆன் ஓதுதல், திக்ருச் செய்தல் போன்ற இபாதத்தில் கழித்தல். (5) கோபப்படாமல் எதற்காகவும் ஆத்திரப்படாமலும் இருத்தல் (6) ஹலாலான தேட்டங்களை விட்டும் கூடத் தவிர்ந்திருத்தல்.

நோன்பாளிக்கு மக்ரூஹான செயல்கள் :

(1) அவசியமின்றி எதையேனும் மெல்லுவது, சுவைப்பது

(2) வாயில் எச்சலைச் சேர்த்து வைத்து விழுங்குதல் (3) உடல் பலவீனம் ஏற்படும் செயல்களைச் செய்வது

நோன்பாளிக்கு மக்ரூஹ் அல்லாத செயல்கள் :

(1) உடலுறவில் கொண்டு போய் விடாது என உறுதி இருக்குமேயானால் மனைவியோடு முத்தம் போன்ற செயல்களில் ஈடுபடுதல்.

(2) வாய் கொப்பளித்தலும் – மூக்குக்குத் தண்ணீர் செலுத்துவதும் (3) மிஸ்வாக்குச் செய்வது.

கஃப்ஃபாரா :

கஃப்ஃபாரா என்றால் குற்றப் பரிகாரம் எனப் பொருள்படும். நோன்பாளி ஒருவர் சில குற்றங்கள் செய்து விட்டால் அவர் கீழக்கண்ட குற்றப் பரிகாரம் செய்வது கட்டாயமாகும். (1) அடிமையை விடுதலை செய்வது. (2) பெருநாட்களோ அய்யாமுத் தஷ்ரீக் நாட்களோ வராத நாட்களில் தொடர்ந்து அதுவும் இயலாவிட்டால் 60 ஏழைகளுக்கு உணவளித்தல்.

நோன்பை முறிக்கும் செயல்கள் :

(இவற்றைச் செய்யாததால் அந்த நோன்பைக் களாச் செய்வதோடு, கஃப்ஃபாராவும் கொடுக்க வேண்டும். ரமலான் மாத்தில் கீழ்க்காணும் காரியங்களால் ஞாபகத்தோடு வேண்டுமென்றே செய்தால் மட்டுமே கஃப்ஃபாரா வாஜிபாகும். ரமலான் அல்லாத காலத்திலோ, ரமலானிலோ கூட அந்தரங்கமாகவோ, நிர்ப்பந்தமாகவோ செய்தால் கஃப்ஃபாரா கடமை அல்ல, களாச் செய்ய வேண்டும்.

(1) எதையேனும் சாப்பிடுதல் (2) எதையேனும் குடித்தல் (3) முன் பின் துவாரங்களில் எதிலேனும் புணர்ச்சி செய்தல் (4) வாயில் நுழைந்த மழைநீரை விழுங்குதல் (5) பற்களுக்கிடையே சிக்கிய கடலைப் பருப்பின் அளவிற்கு அதிகமான மாமிசத்தை விழுங்குதல் (7) நோன்பு முறிந்து விட்டது என நினைத்து மேற்கண்ட செயல்களில் எதிலேனும் ஈடுபடுதல், பிறகு நோன்பு முறியவில்லை எனத் தெரியவருதல்.

நோன்பை முறிக்கும் செயல்கள் :

(இவற்றைச் செய்தால் அந்த நோன்பைக் களாச் செய்ய வேண்டும். கஃப்ஃபாரா கொடுக்க வேண்டிய அவசியமில்லை).

(1) பயணம், நோய் போன்ற மார்க்க அனுமதி பெற்ற காரியங்களுக்காக நோன்பை முறித்தல்

(2) மாவு, காகிதம், கொட்டை போன்ற வழக்கமாக உணவாக உட்கொள்ளாத வயிற்று ஆசையை நிறைவு செய்யாத பொருட்களை உட்கொள்ளுதல் (3) வற்புறுத்தப்பட்டோ, நிர்ப்பந்தமாகவோ எதையேனும் உண்ணுதல், குடித்தல் (4) இரவு உள்ளது என்றோ, சூரியன் மறைந்து விட்டது என்றோ தவறாக நினைத்து நோன்பு நேரத்தில் உண்ணுதல், குடித்தல், (5) வாய் கொப்பளிக்கும்போதோ, நாசிக்குத் தண்ணீர் செலுத்தும்போதோ தவறுதலாகத் தண்ணீர் தொண்டைக்குள்ளே புகுந்து விடுதல் (6) வாய் நிறைய வாந்தி எடுத்தல், (7) புகையைத் தொண்டைக்குள் செலுத்துதல், (8) பற்களுக்கிடையே சிக்கிய கடலைப் பருப்பின் அளவுள்ள உணவு வகையை விழுங்குதல் (9) காதுக்குள் எண்ணெய், நீர், சொட்டு மருந்து போன்றவற்றைச் செலுத்துதல் (10) மூக்குக்குள் சொட்டு மருந்து செலுத்துதல் (11) சுவையுள்ள பற்பொடி, பற்பசை போன்றவற்றால் பல் துலக்குதல் (அதன் சுவை உட்புகுந்து விடுவதால்) (12) குளம், ஆறு போன்றவற்றில் மூழ்கி குளித்தல் (பின் துவாரத்தின் வழியாக சிறிதளவேனும் நீர் மலக்குடலை அடைந்து விடுவதால்) (13) மாத விடாய், பிரசவத் தீட்டு ஆகியவை ஏற்படுதல்.

நோன்பை முறிக்காத செயல்கள் :

(1) மறதியாக சாப்பிடுதல், குடித்தல், உடல் உறவு கொள்ளல் (2) பார்ப்பதாலோ, சிந்திப்பதாலோ விந்து வெளியாகுதல் (3) வாய்க்குள் ஈ நுழைதல் (4) குளிக்கும் போது காதுக்குள் தண்ணீர் செல்லுதல் (5) சளி, எச்சில் போன்றவற்றை விழுங்கினால் (நெஞ்சில் உள்ள கபம் வெளியேறினால் அதைத் துப்பிவிட வேண்டும் – விழுங்குதல் கூடாது) (6) வாய் நிறைய அல்லாமல் குறைவாக வாந்தி வெளிவந்து, இவர் முயற்சி இன்றியே மீண்டும் தொண்டைக்குள் சென்று விடல் (7) கடலைப் பருப்பை விட அளவு குறைவான பற்களுக்கிடையே சிக்கிய பொருளை விழுங்குதல். (8) தொண்டைக்குள் சுவை இறங்காத அளவிற்கு எதையேனும் மெல்லுதல் (குழந்தைகளுக்கு இறைச்சி போன்றவற்றை ஊட்டி விடும்போது, அதன் கடினத் தன்மையை இலகுவாக்குவதற்காக மெல்லுவது போன்று) (9) இன்ஜக்ஷன் (ஊசி போடுதல்).

நோன்பை முறிப்பதை அனுமதிக்கும் காரியங்கள் :

1. நோன்பு வைத்தால் நோய் ஏற்படும் அல்லது அதிகமாகும் (அல்லது) நிவாரணம் தாமதமாகும் என்ற நிலையில் உள்ள நோயாளி.

2. 72 கி.மீட்டருக்கு மேல் பயணம் மேற்கொள்ளும் பயணி

3. நோன்பை முறிக்காவிட்டால் பாதிப்பு ஏற்படும் என அச்சம் ஏற்படும் அளவிற்குப் பசி அல்லது தாகம் ஏற்படுகிற பசியாளி, தாகிப்பவர் 4. கர்ப்பிணி 5. பால் கொடு தாய் 6. மாத விடாய் பெண் 7. பிரசவத் தீட்டுடைய பெண் 8. காஃபிர்களோடு போர் புரிய வேண்டி உள்ள முஜாஹிது ஆகிய இவர்கள் நோன்பை விடுவது கட்டாயமாகும்.

நோன்பு முறிந்தவர் பேண வேண்டிய ஒழுங்குகள் :

ரோன்பு முறிந்தவர்கள் அன்று மஃரிப் வரை மற்ற நோன்பாளியைப் போலவே உண்ணாமலும், குடிக்காமலும் உடலுறவு கொள்ளாமலும் இருப்பது வாஜிபாகும். அன்றைய பகலில் தீட்டு ஏற்பட்ட பெண்ணும் இ போன்றே இருத்தல் வேண்டும். அன்றைய பகலில் பருவம் அடைந்த பெண்ணும் புதிதாக இஸ்லாத்திற்கு வந்தவர்களும் கூட இந்தப் பேணுதலைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆனால், இவர்கள் இருவரும் அந்த நோன்பைக் களாச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

ஃபித்யா என்னும் மாற்றுப் பரிகாரம் :

வயோதிகத்தின் காரணமாகவோ, தீரா நோயின் காரணமாகவோ இனி தன் வாழ்வில் நோன்பு நோற்கவே இயலாது என நிலை ஏற்பட்டால், அப்படிப்பட்டவர் ரமலான் மாதத்தில் நோன்பு நோற்காமல் இருக்க அனுமதி உண்டு. அதற்குப் பதிலாக, காலை, மாலை ஒரு மிஷ்கீனுக்கு உணவளிக்கவோ அல்லது ஸதக்கத்துல் ஃபித்ரு அளவு ஸதகா கொடுக்கவோ அல்லது அதன் கிரயத்தை ஏழைகளுக்குக் கொடுக்கவோ செய்ய வேண்டும். இதற்கு